அரசாங்க அறிவித்தல்

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2011
## பெறுபேறு மீளாய்வு செய்தல்

மேற்படி பரீட்சையின் பெறுபேற்று ஆவணங்கள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அஞ்சலிடப்பட்டுள்ளன.

இப்பரீட்சையின் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரால் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க 30 செ.மீ x 20 செ.மீ அளவில் தயாரித்துப் பூரணப்படுத்தி **2012.01.08** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக் (பாடசாலைகள் பரீட்சை) கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல 1503, கொழும்பு"** என்னும் முகவரிக்கு மட்டும் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெறுபேறு மீளாய்வு (உயர் தர)ப் பரீட்சை 2011"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மீளாய்வின் போது குறித்த விடைத்தாள் பல பரீசிலனைக் குழுவினரினால் பரீசிலிக்கப்படும். அங்கு விடைத்தாள் மதிப்பீட்டின் போது ஏற்பட்டிருக்கக்கூடிய கணிதப் பிழைகளைத் திருத்துவதும், உரிய முறையில் மதிப்பீட்டிற்குட்படாத விடைகள் அல்லது விடைகளின் பகுதிகளிருப்பின் அவற்றை மதிப்பிடலுமாகும். அதன் பெறுபேறாகப் புள்ளிகளில் அல்லது Z புள்ளிகளில் குறைதலோ அல்லது அதிகரித்தலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

**கவனிக்க:-** பொய்யான தகவல்களை உள்ளடக்கிய பெறுபேறு மீளாய்வு விண்ணப்பப்படிவங்களை தாங்கள் உறுதிப்படுத்தி அனுப்புவதன் மூலம் பரீட்சைத் திணைக்களம் பெரும் சிரமத்திற்குள்ளாவதால், அதனை தவிர்க்கும் முகமாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் பெறுபேற்று அட்டவணையின்படி சரியானதா என்பதை தனிப்பட்ட ரீதியில் பரிசீலித்து திருப்தியடைந்த பின்னரே அதிபராகிய தாங்கள் கையொப்பமிட்டு அதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**விண்ணப்பங்கள் தயாரிக்கும் போது பின்வரும் அறிவுறுத்தல்களைக் கட்டாயமாக பின்பற்றவும்.**

1. பாடசாலை விண்ணப்பதாரிகள் பூரணப்படுத்திய தம் விண்ணப்பங்களை தமது பாடசாலை அதிபரூடாக அனுப்பப்பட வேண்டியதுடன் சகல விண்ணப்பங்களும் பரீட்சிக்கப்பட்டு அட்டவணைப்படுத்தி ஒரே உறையிலிட்டு மேற்கூறிய முகவரிக்கு பதிவுத் தபாலில் இடப்பட வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தம் விண்ணப்பங்களை நேரடியாக பரீட்சைத் திணைக்களத்தின் மேற்படி முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவங்களை மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கிணங்க தயாரித்தல் வேண்டும்.
3. ஒரு பாடம் மீளாய்வு செய்வதற்கான கட்டணம் ரூபா 250/- ஆகும். உரிய கட்டணத்தைத் தபாற் காரியாலயம் அல்லது உபதபாற் காரியாலயத்தில் குறித்த கட்டணத்தைச் செலுத்திப் பெறப்படும் பற்றுச் சீட்டின் **மூலப்பிரதியை விண்ணப்பத்தின் மறுபக்கத்தில் கழராதவாறு கட்டாயமாக ஒட்டி** அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் இலக்கத்தையும் விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டையும் தம்மிடம் வைத்திருக்கவும். (பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது உசிதமானதாகும்).
4. முத்திரைகள், காசோலைகள், காசுக் கட்டளைகள், தபாற் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதுடன் மேலே 3ஆம் பந்தியில் கூறப்பட்ட முறையில் அல்லாமல் வேறுமுறையில் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு விண்ணப்பம் என்ற வகையில் அனுப்புதல் வேண்டும்.
6. பெறுபேற்று அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி சுட்டெண், பரீட்சை நிலையத்தின் பெயர் பாட இலக்கம், பாடம், பெற்ற தரம், மொழி மூலம் என்பவற்றைச் சரியாக எழுதுதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். குறைபாடுகளுடன் உள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. தவறான தகவல்களையோ, பூரணமற்ற விபரங்களையோ கொண்டுள்ள விண்ணப்பங்களும் குறித்த திகதிக்கு பின்னர் அனுப்புவோரினது விண்ணப்பங்களும் குறித்த தொகைக்கட்டணம் செலுத்தாதவர்களின் விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான கட்டணங்களும் மீளச் செலுத்தப்படமாட்டாது.
8. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவத்தின் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை மட்டும் பூரணப்படுத்துதல் போதுமானதுடன் விண்ணப்பத்துடன் தமது தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியையும் இணைத்தல் வேண்டும்.
9. 12 - பொதுச் சாதாரண பாடத்தில் 30 இற்கு குறைவான புள்ளிகள் பெற்றதனால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் மட்டும் அப்பாடத்திற்கு மீளாய்விற்காக விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.
10. இவ்வறிவித்தலும் மாதிரி விண்ணப்பப்படிவமும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமான (WWW.Exams.gov.lk) இல் உள்ளது.

ஒப்பம்:அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சை ஆணையாளர் நாயகம்

மதிப்பீட்டுக்(பாடசாலைகள் பரீட்சை) கிளை,
தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல 1503,
கொழும்பு.
2011.12.24 ஆம் திகதி.

(மாதிரிப் படிவத்திற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)
மாதிரி விண்ணப்பப்படிவம் அளவு (30 x 20 செ.மீ)

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2011**
**பெறுபேறு மீளாய்வு செய்தல்**

01. (i) விண்ணப்பதாரியின் பெயர் : வண./ திரு./ திருமதி./ செல்வி : ..............................................................
*(முதலெழுத்துக்களுடன்)*

(ii) தனிப்பட்ட முகவரி : ..............................................................................................................

02. **பரீட்சைச் சுட்டெண்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

03. தாங்கள் பாடசாலைப் பரீட்சார்த்தியா? **ஆம் | இல்லை**
*(தேவையற்ற சொல்லைக் கீறி விடவும்)*

04. பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சை நிலையத்தின் பெயர் : ..........................................................................

05. மீளாய்வு செய்யப்பட வேண்டிய பாடம் : (i) [ ]
(ஒவ்வொரு பாடத்திற்காகவும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டும்.)

(ii) பாட எண் [ ] (iii) **பெற்ற தரம்** [ ] (iv) மொழி மூலம் [ ]

06. ........................................ தபால் / உப தபால் அலுவலகத்தில் ரூ. 250/- (ரூபா இருநூற்று ஐம்பது) பணத்தைச் செலுத்தி .................................. ஆம் திகதியும் ............................. ஆம் இலக்கமும் கொண்ட பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டேன் என உறுதியளிக்கின்றேன்.

**கவனிக்கவும் :- அஞ்சல் அலுவலகத்தில் பணம் செலுத்தியதற்காகப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இதன் மறுபக்கத்தில் கழராதவாறு ஒட்டவும். அதன் போட்டோப்பிரதி ஒன்றைத் தாங்கள் வசம் வைத்திருக்கவும். பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.**

**07.** **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :
என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது பொய்யான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் இவ்விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கும், **மீளாய்வின் பெறுபேறாக ஏற்படும் மாற்றத்தால் புள்ளிகளினதும், தரத்தினதும் குறைவடைதலை அல்லது அதிகரித்தலை ஏற்றுக்கொள்வதற்கும்** மீளாய்வு தொடர்பான சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுவதற்கும் உடன்படுகிறேன் என உறுதியளிக்கின்றேன்.

திகதி : ............................ ..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**08.** பாடசாலைப் பரீட்சார்த்திற்கான **அதிபரின் சான்றிதழ்** :
மேற்குறித்த விண்ணப்பதாரி என்னுடைய பாடசாலையின் மாணவன் / மாணவி என்பதையும் இங்கு குறிப்பிட்டுள்ள **சுட்டெண், பரீட்சை நிலையத்தின் பெயர், பாடம், பாட எண், மொழி ஊடகம், பெற்ற தரம்** என்பன பெறுபேற்று அட்டவணையின்படி சரியானவை எனவும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி விண்ணப்பத்தின் மறுபக்கத்தில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதி செய்கின்றேன்.

பாடசாலையின் பெயரும் முகவரியும்: ..................................................
திகதி : அதிபரின் கையொப்பம்
பதவி முத்திரை :

**கவனிக்க : (i).** விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் முன் அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து கேட்கப்பட்டுள்ள சகல தகவல்களையும் பிழையின்றிப் பூரணப்படுத்துதல் வேண்டும். முக்கியமாக 5 இல் கேட்கப்பட்டுள்ள பாடத்தையும் பாடஎண்ணையும் பிழையின்றி பொருத்துதல் வேண்டும். பூரணமற்ற அல்லது பிழையான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**(ii).** தனிப்பட்ட பரீசார்த்திகள் இல 01 தொடக்கம் 07 வரை மட்டும் பூர்த்தி செய்தல் போதுமானதுடன் தமது தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி ஒன்றையும்